ௐம்

சிவமயம்

திருக்கழுக்குன்றம்

# சங்கதீர்த்த புஷ்கரமென்னும்
# ஸ்தல புராணச் சுருக்கத்துடன்
# சங்கதீர்த்த மேளா

## (வசனம்)

குரு கன்னியா ராசிக்கு 12-வருஷத்துக் கோர் முறை வரும்போது
நேரும் புண்ணியகால மஹிமை விளக்கம்

2-ம் பதிப்பு



அநேக திருத்தங்களோடு

நூலாசிரியன்:—
**பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகி**
நேடிவ் வயித்தியம், திருக்கழுக்குன்றம்.

பிரசுரகர்த்தர்:—
**T. M. வேதாசலம் பிள்ளை,**
(S/o மலைக்கொழுந்து பண்டாரம் - சுதேசவைத்தியம்.)
ஜெனரல் மர்ச்செண்ட் அண்டுகமிஷன் ஏஜெண்ட்,
திருக்கழுக்குன்றம்.

இதன் விலை அணா 2.

ஓம்
சிவமயம்

திருக்கழுக்குன்றம்

# சங்கதீர்த்த புஷ்கரமென்னும் ஸ்தல புராணச் சுருக்கத்துடன்

# சங்கதீர்த்த மேளா

## (வசனம்)

குரு கன்னியா ராசிக்கு 12-வருஷத்துக் கோர் முறை வரும்போது நேரும் புண்ணியகால மஹிமை விளக்கம்

நூலாசிரியன்:—
பண்டிட். S. R. நமசிவாய ராஜயோகி
நேடிவ் வயித்தியம், திருக்கழுக்குன்றம்.

2-ம் பதிப்பு (அநேக திருத்தங்களோடு)

பிரசுரகர்த்தர்:—
T. M. வேதாசலம் பிள்ளை,
(S/o மலைக்கொழுந்து பண்டாரம் - சுதேசவைத்தியம்.)
ஜெனரல் மர்ச்செண்ட் அண்டுகமிஷன் ஏஜெண்ட்,
திருக்கழுக்குன்றம்.

குறிப்பு:-ஸ்ரீமுகஸு ஆடிமீ 13உ சுக்கிரவாரம் (28-7-33) சங்கதீர்த்த புஷ்கர மஹா புண்ணியகாலம். அன்றிரவு லக்ஷ தீபம் - திருக்கல்யாணம் ரிஷபவாகன சேவை.

# முகவுரை.

"சங்கதீர்த்த மேளா" என்னும் பெயரினைக் கண்டு தென்னாட்டார் பலர் அதிசய முறுவார்கள். "மேளா" என்னும் வடமொழிச்சொல் "கூட்டம்" என்கிற தமிழ்ப் பதத்துக்குரியதாகும். கங்கையாதி மூன்றரைக்கோடி நதிகளும் பொறுமையினால் ஒருவருக்கொருவர் வாதாடி வழக்கிட்டு, தன்னயகன் சமுத்திர அரசனது புத்திமதியும் கேளாமல்; கஷ்டமுற்று, கோதாவரி தீரத்துள்ள கோடீஸ்வரர் ஆலயம் சென்று பிரார்த்திக்க, அப்பெருமானது ஆக்கினையால் இந்த திருக்கழுக்குன்றம் சங்க தீர்த்தத்துக்குக்கூட்டமாகவந்து ஸ்நானம் செய்து, தங்களுக்குண்டான பொறுமையாதி துர்க்குணங்களைப்போக்கிக் கொண்டார்களென்பது புராணசம்மதம். இது ஸ்காந்த புராணம், நந்தீஸ்வர சம்வாதம், உருத்திரகோடி மான்மியம், சங்கதீர்த்த அரிய பெரிய மஹிமைகளை 4-5-அத்தியாயங்களாகச் சம்ஸ்கிருத ஸ்லோகங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. இதை அனுசரித்து திருக்கழுக்குன்றத் தலபுராண ஆசிரியர் அந்தக் கவி வீர ராகவ முதலியார் "சிங்கமேற் குரு வந்தேய்த" என்று சுருக்கிச் சொல்லிவிட்டார்.

இந்த மஹா புண்ணியகால வைபவத்தை திருக்கழுக்குன்ற தேவஸ்தானத்தில் அக்கால தரும கருத்தாவாயிருந்த ஸ்ரீமான் மா. மு. குமாரஸ்வாமி முதலியார், சென்ற துன்மதி௵ ஆவணிமீ 1உ (16-8-21) மங்களவாரம் மிக்க சிறப்பாக நடத்தினர். லக்ஷக்கணக்கான ஜனங்கள்கூடி சங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அந்த புண்ணியகால பலனை அனுபவித்தார்கள். இரண்டுநாள்முந்தி கங்கையாதி நதிதேவிகளையும் வருண அரசனையும் சங்கதீர்த்தம்மேலண்டை மார்க்கண்டேய கட்டத்தில் தீர்த்தேஸ்வரர் மண்டபத்தில் கும்பங்களில் ஆவாஹனம் செய்து, 5-வேளை ஆகம விதிப்படி பூசைசெய்து புண்ணியகாலத்தின்; பூர்ணகுதியோடு தீர்த்தத்தில் விட, அப்போது ஸ்ரீ வேதகிரிப்பெருமான் நந்திவாகனத்தின்மீது அமர்ந்து, பஞ்ச

## திருக்கழுக்குன்றத்

# தலபுராணச்சுருக்கம்.

ஓர் காலத்தில் வேத வியாசரது அன்புக்குரிய சிஷர் சூத மா முநிவர், தெய்வ லோகம்போல் விளங்கும் நைமிசாரண்யம் சென்றார். அவ்வாரண்யத்தில் வசிக்கும் முநி சிரேஷ்டர்கள், தெய்வீகமாக வந்த சூத முநிவரைப் பார்த்து, வந்தனை வழிபாடுடன் உபசரித்து, ஆசனத்தமர்த்தி, சோடசோபசாரஞ்செய்து, "சுவாமிகளே! தேவரீர் இங்கு எழுந்தருளியது அடியேங்கள் செய்த பாக்கியமே! தங்கள்தரிசன மாத்திரம் எங்கள் அஞ்ஞானம் சூரியன்முன் பனிபோல் நீங்கிற்று. சுவாமின்! தங்களைப்பார்த்த மாத்திரம் எங்களுக்குத் திடீரென ஓர் ஆசை உண்டாயிருக்கிறது; அதனைப் பூர்த்திசெய்யத் தாங்கள் கருணை புரிதல்வேண்டும்

சுவாமின்! ஸ்ரீ கைலாச பதியாகிய சிவபெருமான் பக்த கோடிகள் உய்யும்பொருட்டு,இப்பூவுலகத்தில் அவதரித்துப் பல விதமான லீலைகள் செய்த சரித்திரங்களை அடிக்கடி எங்களுக்குப் போதித்துக் கிருதார்த்தர்களாக்கினீர்கள். இப்போது உருத்திரகோடி மஹா க்ஷேத்திரத்தில் சங்கதீர்த்த மஹாத்மியத்தைப் பற்றி விரிவாகக் கேட்கவேண்டுமென்கிற விருப்பம் உண்டாயிருக்கிறது. முன் னோர்கால் உருத்திர கோடி க்ஷேத்திர மான்மியத்தை விபரமாகச் சொல்லியபோது, சங்கதீர்த்த மான்மியத்தைச் சுருக்கமாகச் சொல்லக் கேட்டோம். தாங்கள் கிருபை வைத்து எங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும்" என்று சவுனகாதிமுநிவர்கள் சூதமுநிவரைப் பிரார்த்தித்துக்கேட்டார்கள்.

சூதமுநிவர் மனங் கசிந்து, இரு கரங்களையும் சிரமேற் கூப்பி, ஸ்ரீ வேதகிரி பெருமானையும் பெண்ணினல்லாள் அம்மையாரையும் ஒரு முகூர்த்த காலம் மனதினால் தியானித்து, ஆநந்த பரவசராய், "முநிசிரேஷ்டர்களே" நினைக்கநினைக்கமனமுருகும்திருக்கழுக்குன்றமென்னும் உருத்திரகோடி மான்மியத்தைப்பற்றி, உங்களுக்கு முன்னம் விரிவாகச் சொல்லி யிருக்கிறே னல்லவா? இப்பொது அதைச் சுருக்கமாகச் சொல்லிப் பின்னர், சங்கதீர்த்த மான்மியத்தை விரிவாகச்சொல்லுகிறேன்; கவனமாய்க் கேளுங்கள். இந்த க்ஷேத்திரமானது மற்றை ஸ்தலங்கள்போல் சாதாரணமான ஸ்தல மல்ல; மூர்த்தி.

தலம்-தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றது. வேதங்கள் பூசித்ததால் ஸ்ரீவேதபுரி என்றும், கோடிஉருத்திரர்கள் பூஜித்ததால் உருத்திரகோடி யென்றும், நந்தியெம்பெருமான் பூஜித்ததால் நந்தி புரி யென்றும், பிரம்மா பூஜித்ததால் பிரம புரி யென்றும், மஹா விஷ்ணு பூஜித்ததால் வேத நாராயண புர மென்றும், துவாதசாதித்தர்கள் பூஜித்ததால் ஆதித்த புரி அல்லது பரிதி புரி யென்றும், முநி கணங்கள் பூஜித்ததால் முநிகணநாதபுர மென்றும், தேவேந்திரன் பூஜித்ததால் இந்திரபுரி யென்றும், அஷ்டவஸுக்கள் பூஜித்ததால் வஸுபுரி யென்றும். கழுகுகள் பூஜித்ததால் கழுகாசல மென்றும் சொல்லப்படும்.

இந்த க்ஷேத்திரம் காஞ்சிக்குத் தென்கிழக்கில், நாலு யோசனை தூரம், சமூத்திரத்துக்கு மேற்கில் ஒரு யோசனை தூரம், இமய மலைக்கும் கங்கா நதிக்கும் தென்பாரிசத்தில் இருநூறு யோசனை தூரம், பிநாகினி-கடிலம் இந்த நதிகளுக்கு வடபாரிசத்தில் பத்து யோசனை தூரம் விஸ்தீரணமுள்ளது.

இந்த க்ஷேத்திர மான்மியம் ஸ்காந்த புராணம் நந்தீஸ்வர சம்வாதத்திலும், சிவபுராணங்களுள் பௌஷியோத்தர புராண-லிங்க புராணங்களிலும் சமஸ்கிருத ஸ்லோகங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## வேதமலைச் சிறப்பு.

இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணம் என்னும் நான்கு வேதங்களே நான்கு மலைகளாக அமர்ந்து, அதர்வண வேத சிரசில் சிவபெருமான் வாழைக்குருத்து உருவாக சுயம்புவாய் எழுந்தருளியிருக்கிறார். அப்பெருமானைச் சுற்றிலும், இந்திரன்-பிர்ம்மா-மஹா விஷ்ணு-நந்தி - காசி ஓங்கார கடத்தில் கழுகு முநிவர்களுக்கு உபதேசித்த தக்ஷிணாமூர்த்தி - சோமாஸ்கந்தர் - போக சக்தி முதலிய அமர்ந்திருக்கக் காணலாம். இது அநாதி யென்றே சொல்லுதல் பொருந்தும்.

## வேதமலையைப் பூஜித்துச் சித்தி பெற்றவர்கள்.

1. கோடி உருத்திரர்கள் அசுரர்களைக் கொன்ற பாப தோஷங்களை நிவிர்த்திப்பதற்கு,வேதமலையைப் பூஜித்தார்கள். அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் உருத்திரகோடீஸ்வரர்; அம்பாள்பெயர் அபிராமி நாயகி; இந்த க்ஷேத்திரம்

வேத மலைக்கும், சங்க தீர்த்தத்துக்கும் ஆக்நேய திக்கிலுள்ளது. தீர்த்தம்:- உருத்திரகோடி தீர்த்தம் இந்த க்ஷேத்திரம் ஆதி யென்றே சொல்லுதல் பொருந்தும்.

2. **நந்திதேவர்** தான் அடைந்த சிவாபராதத்தை நீக்கிக் கொள்ள வேண்டி, இத்தலத்தில் தவம் செய்துகொண்டிருந்தார். அவரது தவத்தைக்கெடுக்க, இந்திரனால் ஏவப்பெற்ற திலோத்தமை, நந்தியின் சாபத்தால் பசு உருப்பெற்று, சுரகுரு அரசன் வேட்டையாடிய போது, அவன் விடுத்த பாணத்தினால், பசு உருவம் நீங்கி, தேவ கன்னிகையானாள்; நந்திதேவர் தவம் செய்த இடம், தற்போது தாழக்கோயில் நந்திதீர்த்தம் அருகாமையிலிருக்கிறது. நந்திதேவர் சிலா விக்கிரகம் தீர்த்தக்கரையிலிருக்கிறது.

3. **மாயீகன்** என்னும் அரசன், பன்றியைத்தின்பதற்கு மாயப் பன்றி உருவெடுத்து, வேத மலையில் திரிந்திருக்க, மார்க்கண்டேயர் மாயப்பன்றி உருவத்தை நிலைத்திருக்கச் சாபம் கொடுத்தார். சுரகுரு அரசனது பாணத்தால் அந்தச் சாபம் நீங்கிப் பழைய மாயீகன் ஆனான்.

4. அஷ்ட வசுக்களுக்குக் காமதேனுவின் சாபத்தால் தன் உருக்கள் மாறி, மார்க்கண்டேயர் அநுக்கிரகத்தால், இவ் வேத மலையில் தவம் செய்து, சாபத்தை நீக்கிக் கொண்டார்கள்.

5. **பிரம்மா - விஷ்ணு** இவ்விருவரும் பெற்ற சாபங்கள் இவ் வேதமலையில் தவஞ் செய்ய நீங்கின.

6. **தேவேந்திரன்** தான் பெற்ற சாபத்தை நிவிர்த்திக்க, இவ் வேதமலையில் தவஞ்செய்தார்.

☞ தேவேந்திரன் சிவபெருமானைப் பூஜிப்பது இடி அபிஷேகமாக நாம் காணலாம். இது 12 மனுஷ்ய வருஷத்துக்கொருதரம் வேதமலையில் சிவபெருமானுக்கு நேரே விழுகிற வழக்கம். கடைசியில் 18-9-0 நடந்தது; பிரமோதூத ௵ புரட்டாசி௴ 25௳யில் விழுந்த நீர் இடி வழக்கம் போலின்றி, கோயில் பிரகாரத்தில் விழுந்து, அங்குள்ள மட்பாண்டங்கள் சேதமாயின.

7. **ஸ்ரீ** சிவ சுப்பிரமணியக்கடவுள் சிவ பெருமானுக்குப் பிரணவ மஹா மந்திரத்தின் அரிய பெரிய மஹிமைகளைக்கூறிய பெருமைக்காக, இவ் வேதமலையில் பக்தகோடிகளது துன்பத்தை நீக்க எழுந்தருளியிருக்கின்றார்.

8 பன்னிரண்டு சூரியர்கள் பார்த்தன் என்னும் அசுரனால் ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்கு, இவ் வேதமலையில் தவஞ்செய்து சுகம் பெற்றார்கள்.

9. பிர்ம்மாவின் மானஸீக புத்திரர்கள் எண்மர், சாரூப பதவியை வேண்டித் தவம் செய்தார்கள். சிவபெருமான் பிரத்தியக்ஷமானார். சாரூபத்தைவிட்டு சாயுச்சியபதவியைக் கேட்டார்கள். ஒன்றை நினைத்துமற்றொன்றைக் கேட்டதற்காக, எட்டு முனிவர்களும் கழுகுகளாகப்பிறக்கும்படி சபித்தார். அந்தச் சாபம் நீங்குவதற்காக கிரேதாயுகத்தில் சண்டன்-பிரசண்டன் என்னும் இருமுனிவர்கள் கழுகுகளாகப் பிறந்து, இம்மலையில் தவம்செய்து யுக முடிவில் சாயுஜ்யபதவியைப் பெற்றன. திரேதா யுகத்தில் சம்பாதி-சடாயு என்னும் இரு கழுகுகள் தவஞ்செய்து முத்தி பெற்றன. துவாபர யுகத்தில் சம்பு குத்தன்-மாகுத்தன் இரு கழுகுகள்தவஞ் செய்து முத்தி அடைந்தன. கலியுகத்தில் பூஷா-விதாதா என்னும் இரு கழுகுகள் தவம் செய்கின்றன.

☞ இப்போது இருகழுகள் தினசரி காலை 11 - மணி சுமாருக்கு, வேத மலையில் பக்ஷி பாறையில் அமர்ந்து, சைவப்பண்டாரம் கொடுக்கும் வெல்லம் கலந்த அன்னத்தைச் சாப்பிட்டுப் போகின்றன. இதனாலே இந்த க்ஷேத்திரத்துக்குப் பக்ஷி தீர்த்தமென வழங்கி வருகிறது. இந்த அன்னம் கொடுக்கும்பழக்கம் ஆதியில் செங்குந்த மரபினர்களுக்கே உண்டென்பதற்கு, அநேக நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்பட்ட செங்குந்தர் சங்கப்பட்டயத்தில் "சம்பாதிக்கழுதளிக்கும் செங்குந்தம்" எனவும், வீர நாராயணவிஜயத்தில் "கழுக்குன்றிற்கமுதூட்டும் கைக்கோளர்" என்றும் சொல்லியிருப்பதே போந்த சாக்ஷியாகும். தவிர, அந்த பூஷா-விதாதா என்னும் இரு கழுகுகள் 5000 வருஷம் ஜீவித்து நமக்குத் தரிசனம் தருகிறதா? என்னும் கேள்விக்குத் தக்க சமாதானம் "பாவனமாத்திரம் மனோசாந்தி" என்பதைக் கவனிக்க வேண்டும்.

10. மார்க்கண்டேய முனிவர் இந்த க்ஷேத்திரத்துக்கு விஜயம் செய்து, சங்க தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டைசெய்து, அதற்கு அபிஷேக பாத்திரமில்லாமல் மயங்கி நிற்க, இந்த தீர்த்தத்தில் சங்கம்பிறந்தது.

☞ அந்த வழக்கத்தின்படி 12 - வருஷத்துக் கோர்தரம் சங்கம் பிறக்கிறது. 18-2-1909 - 27-1-1919ல் சங்கம் பிறந்தது. அதற்கு மேல் இதுவரையும் உற்பத்தியாகவில்லை.

11. முநிகணங்களுக்குப் பதஞ்சலி முநிவரால் உபதேசிக்கப்பெற்ற பாணினீயம் என்னும் வியாகரணத்துக்குரிய உண்மைப்பொருள் விளங்காது சந்தேகம் உண்டானபோது, இவ்வேத மலையில் தவம் செய்து உண்மை தெளிந்து ஆனந்தமடைந்தார்கள்.

12. மஹா பலிபுரத்தை அரசாண்ட சுரகுருச் சக்கிரவர்த்தி வேட்டையாட வேத மலைக்காட்டுக்கு வந்து, வேட்டைஆடினன். அப்போது மாயீகன் என்னும் மாயப்பன்றியானது அரசனது பாணத்துக்கு அகப்படாது மறைந்தது. அந்த துஷ்டப்பன்றியைக்கொல்ல, அங்குமிங்கும் அலைந்து, கடைசியில் ஓர் பாணம் விட்டான். அந்தப் பாணமானது மாயீகனென்னும் பன்றியைக் கொன்றதுடன், அருகே யிருந்த திலோர்த்தமை யாகிய பசுவையும் கொன்றது; அரசன் கோஹத்தி தோஷம் வந்துவிட்டதென்று நடுங்கினன். பசுவாயிருந்த திலோர்த்தமை தேவ கன்னிகையாக உருவெடுத்து, "அரசனே! நான் திலோர்த்தமை; நந்திதேவரது தவத்தைக்கெடுக்க இந்திரனால் ஏவப்பட்டு, நந்தி தேவரால் சாபம் பெற்றவள்; உன்னாலே சாப விமோசனமாக வேண்டுவது அந்நாள் ஆக்கினை; உனக்கு கோஹத்தி தோஷம் நேர்ந்துவிட்டதென்று பயப்படவேண்டாம் என்று சொல்லி, ஆகாய மார்க்கமாகச் சென்றாள். மாயீகனும் தான் அசுரனென்றும், மார்க்கண்டேயரது சாபத்தால், இவ்வாறு நேர்ந்ததென்றும் சொன்னான். இது காலையில் வேட்டைக்குக் கூடவந்த குஷ்ட நாய் தாக விடாய்கொண்டு, அம்மலைமீதிருந்த சுனைக்குள் சென்று, கால் தவறிச் சுனைக்குள் விழுந்தது. அந்நாய் குஷ்டரோகம் நீங்கிப் பொன்போல் பிரகாசித்தது. இவ்வாச்சரியத்தைக் கண்ட குஷ்டநோய் கொண்ட மந்திரி, தானும் அந்த சுனைக்குப் போய்ப்பார்த்தபோது, அச்சுனைநீர் புழுக்களால் நிரம்பியதுபோல் காணப்பட்டது. அதனால் மந்திரி வாய்க்குள் நீர்போகாமல், ஸ்நானம் மாத்திரம் செய்தான். வாய் தவிர, சரீரமுழுதும் சொர்ணம்போல் பிரகாசித்தது, மந்திரி அரசனிடம் இந்த சங்கதி விளம்ப, அன்று முதல்

அம்மந்திரிக்கு **முத்துமணி** வேள்வாயன் என்கிற பெயர் வந்தது.

13. சுரகுரு அரசன் தனக்குக் கோஹத்திதோஷம் இல்லை யென்பதை உறுதி செய்து கொண்டு, மஹாபலிபுரம் திரும்ப யத்தனிக்கையில், அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்த பூஷா - விதாதா என்கிற இரு கழுகுகளும், சுரகுரு அரசனோடு சண்டையிட்டு, அவனதுசேனைகளைச் சின்னாபின்னப் படுத்திற்று, அரசன் ஆச்சரியமுற்று, அக்கழுகுகளை நமஸ்கரித்தான். கழுகுகள் அரசனுக்கு இந்த க்ஷேத்திர மான்மியம்-தீர்த்தமான்மிய முதலிய போதித்து, ஞான மார்க்கத்தையும் உபதேசித்தன. அதன்மீது சுரகுரு அரசன் அஞ்ஞானம் நீங்கி, கோஹத்தி தோஷம் நீங்குதற்குச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தான்.

அந்த லிங்கந்தான் தாழக்கோயிலில் **பக்தவற்சலர்** என்கிற நாமதேயத்தோடு விளங்குகிறது.

14. சிவ பெருமான் நந்திதேவரை அழைத்து, கைலையங்கிரியின் சிகரங்களுள் மூன்று சிகரங்களை, பூலோகத்தில் மூன்று இடங்களில் அமர்த்தி வருவாயாக என்று ஆக்யாபித்தார். அவ்வாறே, நந்தியெம்பெருமான் வடக்கே மல்லிகார்ச்சுன புரத்தில் ஒன்றும், திருக்காளத்தியில் ஒன்றும், திருக்கழுக் குன்றத்தில் ஒன்றுமாக அமர்த்தினார். அதனால் இந்த க்ஷேத்திரத்துக்கு **தக்ஷிண** கைலாசமென்றும் - சிவபுரம் என்றும் வழங்கி வருகிறது. ஆதலால், இந்த க்ஷேத்திரத்தில் வசித்தாலும், ஸ்ரீ வேதகிரியைப் பக்தி சிரத்தையோடு பிரதக்ஷிணம் செய்தாலும், இஷ்ட காம்யங்கள் சித்தியாவதோடு, மறுமையில் மோக்ஷ பதவியையும் அடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

15. **தீர்த்தங்கள்:**-இந்த வேத மலையைச் சுற்றிலும் அநேக தீர்த்தங்கள் உண்டாயினும், முக்கியம் திருமலைக்குக் கிழக்கு (மூவர்கோயிலுக்குப் பின்பக்கம்) இந்திரதீர்த்தம்; அக்கினி மூலையில் சம்புதீர்த்தம் - உருத்திரகோடி தீர்த்தம்; தெற்கு வஸிஸ்டதீர்த்தம்; நிருதி மூலையில் மெய்ஞ்ஞான தீர்த்தம்- **அகஸ்திய தீர்த்தம்-மார்க்கண்டேய தீர்த்தம்-விஸ்வா மித்ர**

தீர்த்தம்; மேற்கு நந்திதீர்த்தம்-வருண தீர்த்தம்;வடமேற்கில் அகலிகை தீர்த்தம்; வேதகிரியின் மேல் கழுகு முனிவர்கள் மூக்கினுல் கீறியது சம்பாதி தீர்த்தம்.

☞ இந்த திருக்கழுக்குன்ற மான்மியத்தை விபரமாக அறிய விரும்புவோர் திருக்கழுக்குன்றம் பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியாரால் பிரசுரிக்கப்பெற்ற கால் அணு - ஒரு அணு - இரண்டு ரூபா விலையுள்ள புத்தகம் வாங்கி வாசித்தால், சகல வித இரகஸ்யங்களையும் அறியலாம்.

## சங்க தீர்த்த வைபவம்.

**சூதர் சொல்லுகிறார்:-** சௌனகாதி முனி ஸ்ரேஸ்டர்களே! திருக்கழுக்குன்றம் என்னும் உருத்திரகோடி மான்மியத்தை ஒருவாறு சுருக்கிக் கூறினேன். இப்போது சங்க தீர்த்த மான்மியத்தைப்பற்றி விசேஷமாகக் கூறுகின்றேன்; கவனமாய்க் கேளுங்கள்.

☞ சங்கதீர்த்தம் கீழ் சந்நிதி வீதி கோடியில் சுமார் 1000-கஜம் விஸ்தீர்ண முள்ளது. இந்த தீர்த்தத்துக்கு நான்கு கட்டங்கள் (Ghats) உண்டு. இதன் கீழண்டை கரைக்கு ஹநுமத் கட்டம் (Hanuman Ghat) என்றும்,மேலக்கரைக்கு மார்க்கண்டேய கட்டம் (Markandaya Ghat) என்றும், தென்னண்டை கரைக்கு உருத்திர கோடிகட்டம் (Ruthrakodi Ghat) என்றும், வடவண்டை கரைக்கு ஸ்ரீ வேதகிரிகட்டம் என்றும் பெயர் வழங்கி வருகிறது. இதற்குக் காரணம கீழண்டைகரையில் ஹநுமான் கோயிலும், மேலண்டை கரையில் தீர்த்தேஸ்வரர் அல்லது மார்க்கண்டேயர் கோயிலும், தென்னண்டை கரை வாயு மூலையில் உருத்திரகோடீஸ்வரர் கோயிலும், வடவண்டை கரையில் ஸ்ரீ வேதகிரி மலையும் இருக்கிறது.

சுத்தமான ஊற்று ஜலம் நிரம்பியது. வேத மலையிலுள்ள சத்துள்ள சித்து மூலிகைகளில் ஊறிய ஜலம் வருவாயுள்ளது. தாமர சத்துடையது. 12-வருஷத்துக்கோர்தரம் சங்கமொன்றீன்றளிக்கும் பெருமையுடையது. சர்வ ஜனங்களது கர்ம ரோகங்களை நீக்க வல்லது. இந்த தீர்த்தத்தின் அரிய பெரிய மஹிமைகளை ஆதிசேஷ

ஹூம், அளவிட முடியாதென்றால், முநிவர்களே! யான் என்ன சொல்லப் போகின்றேன்?

பூவுலகத்திலே தீர்த்த புஷ்கரம் என்கிற விசேஷ புண்ய காலம் சில தீர்த்தங்களில் நடப்பதுண்டு. அதன் விபரத்தை முதலில் சொல்லி விட்டு, சங்க தீர்த்த புஷ்கரத்தைப் பற்றிப்பின்னர் சொல்லுகிறேன்,

நவக்கிரகங்களுக்குள் முதன்மை பெற்ற சுபக்கிரகமாகிய குருவினுடைய சாரத்தை அனுஷ்டித்து, தீர்த்த புஷ்கரம் உலகில் நடைபெறுகிறது. கும்ப ராசியில் குரு பிரவேசிக்கும்போது வட இந்தியாவில் அரித்துவாரம்-பிரயாகை இவ்விரண்டு இடங்களிலும், கடகத்தில் குரு பிரவேசிக்கும் போது (Nasik) நாசிக் என்னும் தேயத்திலும், சிம்மத்தில் குரு பிரவேசிக்கும்போது கோதாவரிதீரம்-உஜ்ஜீயின் (Ujjain) தேசத்திலும், தென் இந்தியாவில் கும்பகோணம் மஹா மக(மாமாங்கம்)குளத்திலும், கன்னியில் குரு பிரவேசிக்கும் போது, கிருஷ்ணா நதி தீரம்-பேஜ்வாடா விலும், திருக்கழுக்குன்றம் என்னும் உருத்திரகோடி க்ஷேத்திரம் சங்க தீர்த்தத்திலும் தீர்த்த புஷ்கர மஹா புண்ணிய காலம் நடக்கிறது. இக்காலத்தில் பக்த கோடிகள் லக்ஷக்கணக்காகக் கூடி, அந்த தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து, நித்திய கருமாநுஷ்டானங்கள் முடித்து, பிதுர் சிரார்த்தம் கோதான முதலிய தானங்கள்-சிவார்ச்சனே-அன்ன விரயம் முதலிய சத் கருமங்கள் செய்தால், இம்மையில் புத்திர பவுத்திர களத்திராதிகள் சூழ, சகல சம்பத்தோடு வாழ்வதோடு,மறுமையில் மோக்ஷ பதவியையும் அடைவார்கள்.

முநிவர்களே! இத்தகைய தீர்த்த புஷ்கர மஹா புண்யகாலம் சங்க தீர்த்தத்துக்கும் உண்டு என்பதை, இங்கு விரிவாகச் சொல்லுகிறேன்; கேளுங்கள். சூத முநிவர் சொல்லுகிறார்.

## ஸ்லோகம்.

"கங்காத்யஸ் ஸரிதஸ் ஸ்வபுண்ய விபவா தன்யோன்ய மாற் சரியஹ:, பத்யெள சானுனயே பரிதேன ஸஹித: கோடீஸ்வர ஸ்யாக்ஞயா, ஸாமான்யா ஹிதிதாஸ் ஸ---நிற்சிதத் த்பஹ: ஸ்ரீஸங்க தீர்த்தா த்வயம் கன்யாரியே நிகமாசலே ஸபனனுத் ஸ்நாநாத் வாயவு நிர்விர்திம்."

கங்கை-யமுனை-ஸரஸ்வதி-வைகாணி - கௌதமை - மலப்பிர தாணி - துங்கபத்ரை - நர்மதா - கம்பை - பம்பை - கோமுகை - பொன்புகரி - தென்குமரி-சிவகங்கை-கண்டகி - வேத்ரவதி- பிராமி- தேவகை - பிநாகி - பாலை - பொருனை என்று வழங்கும் தாம்பிர- வர்ணி - ஸோவதி - சிந்து-ஸோமி - அளகை - நந்தினி - மந்தாத்ரி பெண்ணை – அம்பை - இந்த்ரபுத்ரி - காவேரி - குத்ரை - சரயு - வைகை-மணிமுத்தா முதலிய மூன்றரைக் கோடி நதிகளும் தங்கள் நாயகராய் விளங்கும் சமுத்திர அரசனிடம் பூவு மணமும் போல சமரசமாய் இன்ப சுகம் பொருந்தி வாழ்ந்து வரும் சமயத்தில்,

ஓர் நாள் மேலே கூறிய நதிகள் யாவும் தத்தமக்குரிய அரிய பெரிய மஹிமைகளையும் விசேஷங்களையும் உணர்ந்து,தமக்குத்தாமே பெரியோமென அக மகிழ்ந்து. ஒருவருக்கொருவர் பொறாமையி னால், தம் அன்பினுக்குரிய நாயகனாக விளங்கும் சமுத்திர அரசனுக் குச் செய்யவேண்டிய பணிவிடைகளை மறந்து,பழக்கமாயுள்ள முன் பின் முறைமாறி, இந்நாள் எனக்கே உரியது;இந்நாள் உனக்கே உரி யதென்று சண்டையிட்டு நின்றார்கள். இந்த கோலா கலத்தைக் கண்ட சமுத்திர அரசன் ஆச்சரியமுற்று, மனம் வருந்தி பொது வான வார்த்தையாகச் சொல்லுகிறான். "ஓ! நதிகளாகிய என் அரு மை நாயகிகாள்! இத்தனை நாள் மன ஒருமையோடு வாழ்ந்து வந்த நீங்கள், இன்று மாற்சரியப்பட்டு நிற்க வேண்டிய காரணம் என்ன? நான் உங்கள் எல்லோரையும் ஏற்றத் தாழ்வின்றிச்சமமாகப்பார்த்து, உங்களுக்கு வேண்டும் நவரத்தினங்களை வேண்டியபடியே கொடுத்து வருகிறேன் அல்லவா? தவிர, உங்களுக்கு என் பரிபூரண அன்பைச் செலுத்தி, அமுதோபசாரம் தந்து ரக்ஷித்து வருகிறேன் என்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அப்படியிருக்க, உங்களுக்குப் பொறாமையும் மாற்சரியமும் உண்டான காரணம் தெரியவில்லை. கேவலம் அறிவிலிகள் போல, ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறீர் கள். இது உங்கள் பெருமையினையும் மஹிமையினையும் கெடுக்கும் என்பதை அறிந்து, இந்த க்ஷண முதல் மன ஒற்றுமையோடு வாழுங்கள். நீங்களே இவ்வாறு சண்டையிட்டால், உலகம் பழிக் குமே!" என்று மிக்க சமாதானமாகச் சொன்னான்.

அந் நதிக்கூட்டங்களுள் ஒருவளாகிய பாகீரதி என்னும் பெயரினை யுடைய கங்கை யானவள், தன் நாயகன் பொதுவாகச் சொன்ன

சமாதானமொழிகளைக் கேட்டுக் கோபமுற்று,"அரசரேறே! கங்கை யாகிய அடியாள் தங்களை நமஸ்கரித்து விண்ணப்பிக்கிறேன். என் அருமை நாயகரே! தாங்கள் எல்லோரையும் ஒன்றுசேர்த்துப்பொது வாகச் சொன்ன உபசார வார்த்தைகள் வெகு நன்று யிருக்கிறது. அந்த சொற்கள் என் மனதை வருத்துகின்றது. "குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்னும் பெரியார் வாக்கிற் கிணங்க, நற்குண நற்செய்கைகள் நிறைந்த குல ஸ்திரீகட்குத் தன் கொழுநனது மன அன்பும் ஆதரவுமே மேன்மை யுடையது. அது இல்லாதபோது நவரத்தினங்களும், அமுதமான உபசார மொழிகளும், சங்கநிதி பத்மநிதிகளும், தேவலோக வாழ்வும் என்னபலம் கொடுக்கும்? தத்தம் கணவர்களால் உள்ளன்போடு ஆதரிக்கப்படாத குல ஸ்திரீகளுக்கு அழகு என் செய்யும்? ஆபரணம் என்செய்யும்? வாழ்க்கைச் சுகம் எதுக்கு? போகபோக்யாதிகளால் என்ன பலன்? உற்றார்-பெற்றார்-உறவின் முறையார் இருந்தும் என்ன பிரயோசனம்? உயிருடன் கூடிய உடல் நடைப்பிணத்துக்குச் சமானம்; ஒருவருக்கு நேரும் சுக துக்கங்கள், அவற்றை அநுபவிக்கும் காலநிர்ணயம், அவரவர் பூர்வ வினைக்கேற்றாப்போல் நடக்கிறது. தாழ்ந்த நாயும் பன்றியும் கூட, தீய உணவுண்டு பசியாறி, அற்ப சுகத்திலீடு பட்டுக் காலம் கழிக்கின்றன. ஜீவர்கள் சரீரம் எடுத்து, உலகில் ஜீவித்துள்ள வரையும், உணவூட்டிப் பரிபாலிப்பது சிவபெருமான் திருவருளேயாகும். ஆதலால், இன்னல் தரும் செல்வத்தைப்பெறுவோமென்னும் ஆசையால் குலஸ்திரீகள் தங்கள் மானத்தை இழக்க மனந் துணியார்கள். உயிரைவிட மானமே பெரிது. உத்தம குலத்தவர்கள் ஆடவராயினும் சரி, ஸ்திரீகளாயினும் சரி, கவுரவமாய் நேரும் உணவுண்டு பசியாறிக் காலம் கழிப்பார்கள். மானமின்றி உணவருந்தி உலகில் சுகித்திருப்பதை விட, மானத்தோடு பசியால் வருந்தி, உயிரை விடுவதே உத்தம குலத்தவர்களுக்குப் பெருமை. அன்புநிறைந்து விளங்கும் எங்கள் நாயகமே! உள்ளன்பின்றி நவரத்தினங்களும், அமுதமொழிகளும், உபசாரங்களும் கொடுத்து எங்களை ரக்ஷிப்பதில் என்ன பிரயோசனம்? இது ஒரு புறமிருக்கட்டும். என் சம்பந்தப்பட்ட வரையும் அடியேனை மற்றவர்களுடன் சமப்படுத்தி உபசார மொழிகள் கூறினீர்கள். என் அரிய பெரிய மஹிமைகளையும், எனக்கு உண்டாயிருக்கும் கீர்த்தியினையும் தாங்கள் பகுத்தறிவிக்க மறந்தீர்கள் போலும். மற்றைய தேவிகளோடு என்னையும் சமப்படுத்தி, அவர்களைப்போல் என்னையும் ஒருத்தி

யாக மதித்தீர்கள். ஆயினும் குற்றமில்லை; ஆயிரம் நக்ஷத்திரம் கூடினாலும் ஒரு சந்திரனுக்கிணையாகாதல்லவா? தாங்கள் மற்றைய தேவிகளோடு சமமாய் அடியாளை நினைத்தாலும், உலகம் அப்படி மதிக்குமா? எல்லாம் எனது கால வித்தியாசந்தான். தங்களை நோவதிற் பலன் என்ன?'' என்று, மனம் வருந்திக் கோபத்தோடு சொன்னாள் கங்காதேவி.

இவ்வளவையும் சமுத்திர அரசன் கேட்டு பாகீரதியைப்பார்த்து, ''பெண்ணே! எண்ணறக்கற்றும் எழுத்தற வாசித்தும் பெண் புத்தி பின்புத்தி'' என்று பெரியோர் சொல்வர். அதுபோலவே எவ்வளவு மகிமை பெருமைகளை நீ அடைந்திருந்தும், பேதைப் பெண்களைப்போல் மனம் வருந்துகின்றாய். ''பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்'' என்னும் ஞானத்தாய் ஔவைக் கிழவி வாக்கை மெய்ப்படுத்தினாய். அறிவுவிளக்க மென்பது சிறிதும் உன்னிடத்தில் இல்லை. ஈரேழுபதினான்கு உலகங்களிலும், வேதாகம புராண இதிகாசங்களிலும், உன் மஹிமையினை விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. உலகத்தவர் உன்னையே பெருமைப்படுத்திப் பேசி வருகின்றார்கள். உனது அனுக்கிரகத்தினாலேயே எத்தனையோ கோடி ஜனங்கள் தத்தம் பாப தோஷங்களைப் போக்கிக் கிருதார்த்தர்களாய் வருகிறார்கள். சாக்ஷாத் சிவபெருமான் முடிமீதேறி ஆநந்தத்தை அநுபவித்து விளங்குகிறவள் நீயே! அச்சிவபெருமானின் கண்களை பார்வதி தேவியார் மூடிய அக்காலத்தில், பார்வதியின் கை விரல்களினின்றும் வியர்வையாகத் தோன்றினவளும் நீயே! வைகுந்த வாசராகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பாத தாமரையினின்றும் வெளிவந்தவளும் நீயே! ஜன்ஹு மஹரிஷியின் திருச்செவியிற் றோன்றினவளும் நீயே! ஹிமயமலை அரசனிடம் புத்திரியாக அவதரித்தவளும் நீயே! பரிசுத்தமானவளும் நீயே! நீயே அமலை! சகரர்க்களை மோக்ஷத்துக்கு அனுப்பிய புண்ணியவதியும் நீதான்! சர்வ ஜனங்களது பாப தோஷங்களைப் போக்கடிக்கின்ற உன் புகழும் கீர்த்தியும் ஆகாயமளவும் பரவி நிற்கிறது. உனது பெருமையை எடுத்துரைக்க ஆயிரநாக்கொண்ட ஆதிசேஷனாலும் முடியாதென்றால், நான் எம்மாத்திரம்? ஏ! கங்கா! கோபத்தைவிடு! ஆறுதலடை! பொறுமையைக் கைக்கொள்! நான் பொதுவாக எல்லா நதிகளையும் சமாதானப்படுத்தச் சொல்லிய வார்த்தைகளில் உன் மனதை வருந்தச் செய்யும்மொழிகள் என்ன இருக்கின்றனதா?

தெரியவில்லை. உன்னிடத்து எனக்குள்ள அந்தரங்கமான அன்பும் விஸ்வாசமும் இததகைய தென்பதை நீ அறிந்து கொள்ளாமல், வீணே வருந்துகின்றாய்! பெண்ணே! வருத்தத்தை நீக்கு! நான் உனக்குச் செய்த குறை இன்னதென உணரக்கூடவில்லை. நீ வருவதற்கு முன்பே, என் ஆசைப்பெருக்கினைக் காட்டி, உன்னை அணைந்து, அமுதம் பொழிந்ததை நீ மறைந்தாய்போலும். நல்லது! இனி சந்தோஷித்திரு'' என்று சமுத்திர அரசன் பாகீரதிக்குச் சமாதானம் சொல்லிக் கோபத்தைத் தணித்தான்.

கங்காதேவி! வருணனது வார்த்தையைக் கேட்டுச் சிறிது கோபம் தணிந்தாள். அருகேயிருந்த யமுனை - சரஸ்வதி - நர்மதா-சிந்து - காவேரி முதலிய நதிகள், கங்கையின் பெருமையினால் பொறாமை கொண்டு மனமுடைந்து, ஆ! ஆ! இதுவரையும் நமது நாயகன் எல்லோரையும் சமத்துவமாகப் பார்த்து வருகிறாரென் றெண்ணியல்லவோ இருந்தோம். இப்போது அவர் எண்ணம்வெளிப் பட்டுவிட்டது. பாகீரதியிடம் மாத்திரம் பரிபூர்ண அன்பும் விஸ்வாஸமு மிருப்பதாக, அவர் இதுவரையும் கங்கா தேவியைப் புகழ்ந் துரைத்த மொழிகளால் ஏற்படுகிறது. இருக்கட்டும் சர்வ மஹிமைகளும் கங்காதேவிக்கே! நம் நாயகனும் அவளிடமே சுகிக்கட்டும்! நமக்கு அந்தக் கவலை என்னத்துக்கு? கீர்த்தியும் புகழ்ச்சியும் கங்கைக்கே இருந்து வாழட்டும் என்று மனம் வருந்தி நின்றார்கள். இவர்களுக்கும் ஒருவாறு சமாதான வார்த்தை பேசி, மற்றைய நதிகளின் கோபததையும் தணிததான் சமுத்திர அரசன். ஆயினும், இவர்கள் தவிர, ஏனைய நதிகளும் உள்ளூர மாற்சரியம் கொண்டார்கள்.

இவ்வாறு நதிகள் யாவும் மன ஒருமைப்பாடின்றி, கோபமும் மாற்சரியமும் மேலிட்டு, ஒருவரோடொருவர் சண்டையிட்டு, உன்னிலும் யான் சிறந்தவள்! என்னைவிடச் சிறந்தவளில்லை யென்று இகழ்ந்து, வாதாடிப்போராடி நின்றார்கள். இதைக்கண்ட சமுத்திர அரசன் மனம் வருந்தினான். என்ன சமாதான வார்த்தை பேசினும், இவர்கள் கேட்கிறதாகத் தெரியவில்லை. நாளுக்குநாள் சண்டையும் கூச்சலும் மேலிட்டது. சமுத்திர அரசனது இனிய சமாதான வார்த்தைகள் நதிதேவிகளுக்கு விஷம்போல் கோபத்தை மென்மேலும் வளர்த்தன. என் செய்வான் பாபம்! கவலையில் மூழ்கினான். அதை நீக்க வழியொன்றும் அறியாமல் வருந்தினான்.

இவ்வாறிருக்கையில், சமுத்திர அரசன் மட்டற்ற வருத்தத்தினுல் கோபங்கொண்டு, நதி தேவிகளை நோக்கி, "ஏ! நதிகளா! பொருமை மேலீட்டினுல் உங்களுக்கு நீங்களே உயர்வு கற்பித்துக் கொண்டு, வாதாடி வழக்கிட்டு, என்னைக் கஷ்டப் படுத்துகிறீர்கள். நான் சொல்லும் ஹிதவசனங்கள் உங்கள் பொருமையை வளர்த்து, மாற்சரியத்தை அதிகப்படுத்துகின்றன. உங்கள் போராட்டம் நீங்கும் வழி யாதென பலவழியிலும் யோசித்தேன்; ஒன்றும் விளங்கவில்லை. நீங்கள்தான் உயர்ந்தவர்களென்று மனப்பால் குடித்து மதி மயங்க வேண்டாம். உங்களை விட உயர்விலும் மஹிமையிலும் சிறந்தவர்கள் அநந்தம் கோடி பெயர்கள் இப்பூவுலகத்தில் உண்டு என்பதைச் சிறிது மனமாறச் சிந்தியுங்கள். ஆயிர நாக்கொண்ட ஆதிசேடனுலும் பெருமைகளைச் சொல்லமுடியாத தீர்த்தங்கள் அநேகம் உண்டு. நான் சொல்வதில் உங்களுக்குச் சந்தேகம் உண்டானுல், எல்லாம் வல்ல இறைவராகிய பரமசிவம், கோதாவரி தீரத்தில், சுயம்புவாக சுரேஸ்வரர் என்னும் பெயரோடு விளங்குகின்ருர். அவரிடம் சென்று, உங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டு, போராட்டத்தை முடியுங்கள். அவரிடம் சென்றால், உங்களுடைய பெருமையும் சிறுமையும் தானே வெளிப்பட்டு விடும்." என்ருன் சமுத்திர அரசன்.

இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. நதி தேவிகளின் மாற்சரியமும் போராட்டமும் ஒழியவில்லை. நாளுக்கு நாள் பொருமையும் அசூயையும் வளர்ந்து வந்தன. சமுத்திர அரசனும் நாளுக்கு நாள் கஷ்டங்களை அதிகமாய் அநுபவித்து வந்தான். தவிர, 'எங்கள் குறைகளைத் தீர்க்கக் காலம் வரவில்லையே? கடவுளுக்கும் மனம் வரவில்லையோ?' என்று நதிதேவிகள் சமுத்திர அரசனிடம் முறையிடத் தலைப்பட்டார்கள். இம் முறையீட்டினைக் கேட்ட அரசன் மனம் வருந்தி, "நதி தேவிகளா. உங்களுக்கு எவ்வகையான சமாதானம் சொல்லியும் நன்மை பயக்கவில்லை. யான் சொல்வதைப் பகுத்தறியும் சக்தி உங்களுக்குப் போதாது. நான் என்ன செய்யட்டும்! எல்லோரும் ஏக மனதோடு கோதாவரி தீரத்துக்கு வாருங்கள்! அங்கு கோடீஸ்வரர் உங்கள் மாற்சரியத்தை நீக்குவார்" என்று சொல்லி, நதிதேவிகளோடு சமுத்திர அரசனும் கோதாவரி கோடீஸ்வரர் ஆலயம் சென்ருர்கள்.

கோடீஸ்வரர் ஆலயத்தினுள் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் சுரேஸ்வரர் என்னும் பெயருடைய சிவபெருமானை வணங்கினார்கள். சமுத்திர அரசன் சுரேஸ்வரப் பெருமானை வந்தனை வழிபாடுடன் நமஸ்கரித்து, அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில்விளைந்த ஆரமுதே! அடியேன் நதிதேவிகளின் ஹிம்சையைப் பொறுக்க முடியாமல், தங்கள் சந்நிதானம் வந்தேன். இந்த நதி தேவிகள் பொறாமைக்குண மேலீட்டினால், உன்னினும் யான் பெரியவள்; என்னினும் சிறந்தவர்கள் உலகிலில்லை யென்று மாற்சரியங்கொண்டு. வாதாடி வழக்கிட்டு, அவரவர்க்குள்ள தொழின் முறைகளைவிட்டு, அவதிப்படுவதோடு, என்னையும் கஷ்டத் துக் குள்ளாக்கி வருந்துகிறார்கள். அடிமை எவ்வளவோ சமாதான வார்த்தை சொல்லினும், செவிடன் காதில் சங்கூதின கதைபோல் முடிந்தது. நான் சொல்லும் ஹித வசனங்கள் கால பேதத்தினால் அவர்களது மாற்சரியத்தையும்பொறாமையையும் அதிகப்படுத்திற்று இந்த சங்கடத்தைப் பொறுக்க முடியாமல் தங்கள் சந்நிதானம் வந் தோம். தேவரீர் திருவுளங்கொண்டு, அவர்கள் கொண்ட அசூ யைக் குணத்தை நீக்கி, எனது கஷ்டத்தை நிவிர்த்தி செய்ய வேண்டுவது தேரீரது கடமையாகும். எங்கள் குறைகள் யாவும் நீங்குமளவும், தேவரீர் திருச்சந்நிதானத்திலேயே தங்கியிருப்போம், என விண்ணப்பித்து நின்றான்.

பக்த பராதீனராகிய சுரேஸ்வரப்பெருமான் பெருங் கருணையி னால்,சமுத்திர அரசனை நோக்கி, அப்பா! வருணா! கவலையைநீக்கு ! உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவோம். நீங்கள் இங்கு வந்த சமயம் மஹா புண்ணிய தினமாக்கும் சிம்ம ராசியில் குரு பகவான் பிரவேசிக்கும் போது, இந்த கோதாவரி தீர்த்தத்துக்கு விசேஷ மகிமை உண்டு இந்த புண்ணிய காலத்தில் இந்த தீர்த்தத்தில் நீங் கள் யாவரும் ஸ்நானம் செய்து, எம்மைத்தொழுது வணங்குங்கள். உங்கள் இஷ்ட காம்யம் பூர்த்தியாகும்" என்று ஆசீர்வதித்து மறைந்தார்.

சிவபெருமானது அனுக்கிரகத்தைப் பெற்ற வருணன் மன மகிழ்ந்து, முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுளதோ ? நாயினும் கடையேன், அடிமை செய்த தவப்பயன், சிவபெருமான் திருவாக்கினால் குறைகளைத் தீர்ப்போம் என்று சொல்லும்படி நேர்ந்

தது" என்று அத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, ஜப தபாதிகள் முடித்து, பெருமானைத் தொழுது வணங்கி நின்றான்.

வருணனை ஆசீர்வதித்த பின்னர், சிவபெருமான் கங்கையாதி நதிகளை நோக்கி, "ஏ! நதிகளா! நீங்கள் யாவரும் மன ஒருமையாய் வாழ்ந்து, உங்களுடைய நாயகனைப்பக்தி சிரத்தையோடு வணங்கி உபசரித்து வந்தவர்கள், திடீரென உங்களுக்குப் பொறாமைக்குண மேலிட்டு, மாற்சரிய முண்டான காரணம் என்ன? காலமாறுபாடா! கலியுக விநோதமா! இருக்கட்டும்; எப்போதும் பெண்புத்தி பின் புத்தியே! நீங்கள் வாதாடி வழக்கிடுவது போதாமல், உங்கள் நாயகனையும் கஷ்டப்படுத்துகிறீர்கள். நல்லது! உங்களில் யார் பெரியர்? யார் சிறியார்? சிறிது உற்று நோக்கினால் உங்களுக்கு மஹிமை யேது? பெருமையேது? புகழேது? கீர்த்தியேது? அகங்கார மமகாரத்தினால் அழிகின்றீர்கள்! உங்களைவிட எத்தனையோ மடங்கு மேலானதும் மஹிமையுள்ளதுமான அநந்தங்கோடி தீர்த்தங்கள் இப்பூவுலகில் இருக்கின்றன வென்பதை நீஙகள் அறிந்து கொள்ளாமல், உங்களுக்குள்ளே பெருமை சிறுமைகளைக் கற்பித்துக் கொண்டு, வாதாடி வழக்கிட்டு, வருந்துகின்றீர்கள். இது உங்களுக்கு அடாது. ஏ! நதிகளா! நீங்கள் உங்கள் பொறாமையை ஒழித்து, ஒரு ஒருவருக்கொருவர் அன்பும் விஸ்வாஸமும் பொருந்தி உங்கள் நாயகனோடு இன்புற்று வாழ்வீர்களாக! அதனால், உங்களுக்குச் சிரேயஸும் பெருமையும் தானே உண்டாகும். வீணே மதி இழந்து, மாற்சரியங்கொண்டு, மனமாறுபாடுண்டாகி, மடிய வேண்டாம். நதிகளா! கேளுங்கள்; உங்கள்மாற்சரியம் நீங்கி மகிழ்ச்சியடைய ஒருமார்க்கம் சொல்லுகிறேன்.

ஹிமாலயத்துக்கும் கங்காதீரத்துக்கும் தெற்கு இருநூறு யோசனை தூரம், ஸ்ரீகாஞ்சிமா நகருக்குக் கிழக்கு ஐந்து காததூரம், விருத்தாகாரமான உருத்திரகோடி க்ஷேத்திரம் ஒன்றுளது. அவ்விடத்தில் நான்குவேதங்கள் மலைகளாகவும், அதர்வணவேத சிரசில் நாம்மலைக்கொழுந்துருவாகவும்பக்தகோடிகளை அனுக்கிரகிக்குநிமித்தம் எழுந்தருளியிருக்கின்றோம். அந்தக்ஷேத்திரத்தில் அநந்தம்கோடி தீர்த்தங்கள் உண்டு. அவற்றுள் சங்கதீர்த்தம் விசேஷ மஹிமை பொருந்தியது. இத்தீர்த்தக்கரையில் இந்த்ராதி பிர்ம்ம விஷ்ணுக்கள் அகஸ்தியாதி சித்தர்கள், மார்க்கண்டேயாதி முனிவர்கள் சதாவாசம் செய்கிறார்கள். இந்த தீர்த்தம் மஹா பரிசுத்தம் பொருந்

தியது. வெண்மை நிறமுள்ளது. இதில் அநேக கோடி ஜனங்கள் ஸ்நானபாநுதிகள் செய்து, தத்தம் கர்மரோகங்களை நீக்கிக்கொள்ளு கிறார்கள். பிறவி நோயினையும் தீர்க்க வல்லது. இந்த தீர்த்தத்தின் ஒரு திவலைக்குச் சமானத்தை நீங்கள் அறியும் பக்ஷத்தில், உங்களுக் குள் பெருமை சிறுமை, உயர்வு தாழ்வு என்கிற பேதா பேதங்கள் உண்டாகாது" என்று, கோடீஸ்வரர் திருவாய்மலர்ந்தருள, கங் கையாதி நதிகள் கேட்டு அயர்ந்து ஒன்றும் பேச முடியாமல், திக் பிரமை கொண்டு, பரம பதியின் திருவருளைநாடி, அசைவற்று நின் றார்கள். சமுத்திர அரசனும் நதி தேவிகளும் கோதாவரிதீர்த்தக்கரை யிலேயே சிலநாள்தங்கி, அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவபெரு மானை ஸ்தோத்திரித்திருந்தார்கள். ஓர் நாள் சிவபெருமான் நதி தேவி களையும் சமுத்திர அரசனாகிய வருணனையும் பார்த்து, "நதி தேவி காள்! வருணா! இன்று குருபகவான் கன்னியா ராசிக்குப் போகிறார். நாம் உருத்திரகோடி க்ஷேத்திரத்துக்குப் போகிறோம். நீங்கள் எல் லோரும் அங்கு வாருங்கள்" என்று ஆக்யாபித்தார். அவ்வாறே, வருணனும நதிக்கூட்டங்களும் எம்பெருமான் ஆக்கினைப்படி, உருத்திரகோடி க்ஷேத்திரம் வந்தார்கள் எம்பெருமான் அவர்களை நோக்கி, இதோ பார்த்தீர்களா சங்கதீர்த்தம்! இதன் பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியாது. இத் தீர்த்தத்தில் எல்லோரும் ஸ்நானம் செய்து, அதனாலடையும் பலனை உலகத்தாருக்கு செய்ப் பியுங்கள் என்று சொல்லி வேத பர்வதத்தில் மறைந்தார்.

வருணனும் நதிக்கூட்டங்களும் விதிப்படி சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து எழுந்தார்கள். உடனே அவர்களுக்குப் பொறாமை நீங்கி, சமத்துவ புத்தி உண்டாகி, பரிசுத்த மனதுடையவர்களாய், ஆச்சரியமும் அச்சமும் அடைந்து, என்ன அதிசயம் இது? உலகி லுள்ள யாவத் பொருள்களும் எம்பெருமானது அநுக்கிரகத்தினால் தோன்றிமறைகின்றது. பொருள்களுள் நாமும் ஒரு பாகஸ்தர். அப் படிக்கிருக்க, மாற்சரியமும் பொறாமையும் நமக்கு எங்கிருந்து வந் தது? இதற்கு உற்பத்திக்காரணம் மாயையிலுண்டான அகங்கார மகாரங்களே யாகும். அதனுடைய சக்தியினாலேயே நாம் ஒவ்வொரு வரும் இத்தனை காலம் மாற்சரியமுற்று, வாதாடி வழக்கிட்டு, வருந் தினோம், நமது நாயகனையும் வருத்தினோம். இந்த நல்லெண்ணம் நமக்கு இப்பொது உதித்தது, சங்க தீர்த்தத்தின் மஹிமையாலே

யன்றி வேறில்லே. இத்தகைய இத்தீர்த்தத்தின் மஹிமைக்கு நாம் எம்மாத்திரம்?''என்று தமக்குத் தாமே வருந்தி, நதிக் கூட்டங்கள் யாவும் வருணனிடம் சென்ற', சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, நாயகா! மன்னித்தல் வேண்டும். அறியாமை காரணமாக இத்தனே நாள் உங்கள் மனதுக்குத் துன்பம் செய்தோம். இப்போது சங்க தீர்த்த ஸ்நான விசேஷத்தால், எங்கள் மனம் சாந்தி அடைந்தது. எங்களுக்கு இனி மாற்சரியமும் போராட்டமும் உண்டாக வழியிராது'' என்று சொல்லி, வருண னும் நதிக்கூட்டங்களும் மீண்டும் ஒரு முறை சங்க தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, ஸ்ரீ வேதமலேயைப் பிரதக்ஷிணம் செய்து,சிவபெருமானே ஸ்தோத்திரித்து நின்ருர்கள். இவ்வற்புதத்தைக்காணஇந்திராதிதேவர்கள்-பிரம விஷ்ணுக்கள்-முனிவர்கள்-சித்த வித்யாதரர்கள், கருட கந்தர்வர்-இயக்கர்-பூதர் - மருத்துவர் - யோகியர் முதலியோர் இந்த மஹா புண்ணிய காலத்தில் இத் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, சிவபெருமானே ஸ்தோத்திரித்து நின்ருர்கள்.

சிவபெருமான் வருணன் முன் தோன்றி,அரசனே! இந்த உருத்திரகோடி க்ஷேத்திரத்தில்வேதமலே எல்லேக்குள் அநந்தங்கோடிதீர்த்தங்கள் உண்டு. அவற்றுள் லக்ஷம் சிறந்தன. இலக்ஷத்துள் ஆயிரம் சிறந்தன. ஆயிரத்துள் நூறு சிறந்தன. நூற்றுள் பன்னிரன்டு தீர்த்தங்கள் சிறந்தன. அப்பன்னிரன்டினுள் இந்த சங்க தீர்த்தம் மஹா மஹிமைபொருந்தியது. இதில் சதாகாலம் வசிப்போர் மஹா பாக்கியசாலிகள். அவ்வாறு சதா வாசம் செய்யக்கூடாதவர்கள் குரு பகவான் கன்னியாராசிக்கு வந்து தங்கும் ஒரு வருஷம் வது வாசம் செய்வது உத்தமம். இத்தீர்த்தக்கரையில் முனிவர்களும் ரிஷிகளும் சதா வாசஞ் செய்கிருர்கள். வருணனே! கவனமாய்க்கேள்! நீங்கள் எல்லோரும் ஸ்நானம்செய்த இத்தினம், குரு பகவான் கன்னியா ராசிக்குப் பிரவேசிக்கிருர். இந்த மஹா புண்யகாலத்தில் அதாவது கன்னியில் குருதங்கும் ஒரு வருஷம் வரையும்,எவரே னும் இத்தீர்த்தத்தில் ஸ்நான்ம் செய்து பிதுர் தர்ப்பணுதிகள், ஜெப தபங்கள், ஹோமாதி கருமங்கள் செய்து,நம்மை தரிசித்து,வேதமலேயை விதிப்படி பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தால், அவர்கள் இம்மையில் வறுமை-பீடை கர்மரோகங்கள் முதலிய துன்பங்கள் யாவும் நீங்கி, மறுமையில் அஷ்டயிஸ்வரியம் (அரசு-பொன்-மணி-நெல்-மக்கள்-

சுற்றம்-அடிமைகள்-வாகனம்) அஷ்டலக்ஷ்மிகள் (தன-தான்ய-சந்தான-சௌபாக்ய-வீர-விஜய-வர - கெஜலக்ஷ்மிகள், புத்திரசந்தானம்- இஷ்டகாம்யசித்தி முதலிய பெற்று, மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்யத்தைப் பெறுவார்கள்'' என்று சொல்லி மறைந்தார்.

சிவபெருமான் ஆசீர்வசனங்களைக் கேட்ட வருணனும் நதிக்கூட்டங்களும் மனமகிழ்ச்சி கொண்டு, குரு பகவான் கன்னியா ராசியில் தங்கிய ஒரு வருஷகாலம், உருத்திர கோடி க்ஷேத்திரத்திலேயே வசித்து, வேத மலையைப் பிரதக்ஷிணம் செய்து, ஸ்ரீ வேதகிரிப்பெருமானையும் உலக மாதாவாகிய ஸ்ரீ பெண்ணினல்லாள் அம்மைபாரையும் ஸ்தோத்திரித்து வணங்கிப் பின்னர் தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.

கேட்டீர்களா! சவுனகாதி முனிவர்காள்! கங்கையாதி நதிகளது மாற்சரியத்தை நீக்க வல்லது சங்கதீர்த்த மென்பதை அறியுங்கள். அதிலும், குரு பகவான் சிம்ம ராசியில் வசிக்கும்போது கோதாவரி தீர்த்தத்துக்கும்-கும்பகோணம் மஹா மக குளத்துக்கும், கன்னியா ராசியில் வசிக்கும்போது கிருஷ்ணநதி தீரம் பெஜ்வாடாவுக்கும், திருக்கழுக்குன்றம் சங்க தீர்த்தத்துக்கும் விசேஷ மகிமை உண்டு என்றுசூதர் சொல்ல, முனிவர்கள் சந்தோஷித்து, மற்றுமுள்ள சங்க தீர்த்த விசேஷங்களைச் சொல்லும்படி பிரார்த்தித்தார்கள்.

---

## மஹா விஷ்ணுவின்
# சாப விமோசனம்.

சூதர் சொல்லுகிறார்:-முனிவர்களே! முன்னோர் காலத்தில் தேவ ராஜனாகிய இந்திரன் விருத்ராசுரனோடு யுத்தம் செய்தான். பலப்பல தந்திரங்கள் செய்தும், அவ்வசுரனைக் கொல்லமுடியாது வருந்தினான். இந்த வரலாற்றினை மஹாவிஷ்ணுவிடம் சென்று விண்ணப்பித்தான் இந்திரன். வைகுந்த வாசன் தீர்க்காலோசனை செய்து, ''அப்பா! இந்திரா! விருத்ராசுரன் எவ்வகை ஆயுதங்களினாலும் இறக்கமாட்டான். ஆனால், ஒரு உபாயம் இருக்கிறது. பிறர் அறியக்கூடா இரகஸ்யம். அதை நான் உனக்குச் சொல்லுகிறேன். ததீசி முனிவர் இருக்கிறார். அவருடைய முதுகு எலும்பினால் அவன்

மரணம் அடைவது நிச்சயம். ததீசி முனிவர் தன் எலும்பைக் கொடுக்க வேண்டும். தந்திரமாய் அவரை யாசிக்க வேண்டும். எவ்விதமாகவாவது அம்முனிவரது எலும்பைக்கொண்டுவரப் பிரயத்தினப்படுவாய் என்றார். இந்திரன் இவ்வுபாயத்தைக்கேட்டுச் சந்தோஷித்தானாயினும், அவரது முதுகெலும்பை யாசிப்பதினால், அம்முனிவரது உடலுக்கு ஆபத்து நேரிடுமேயென்று அஞ்சினான். ஒருவாறு மனந்தெளிந்து, ததீசிமுனிவரிடம் சென்று, வந்தனைவழிபாடு செய்து நமஸ்கரித்து, தான் வந்த காரணத்தைத் தெரிவித்து, முதுகெலும்பை யாசித்தான். ததீசி முனிவர் சிறிதுநேரம் ஆலோசித்து, இந்த இரகஸ்யத்தைச் சொல்லியனுப்பியவர் மஹாவிஷ்ணுவே யாவரென்று திடங்கொண்டு, நம்முடைய உடல் அழிந்தாலும், பிறருடைய நன்மையைக் கோருதல் தருமநெறிகளிற் சிறந்தது என்று எண்ணி, "தேவராஜனே! உன் மனோபீஷ்டப்படியே எனது முதுகெலும்பை உனக்குத் தத்தம் செய்தேன். அதனைக் கொண்டுபோய் உனது எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்வாய்" என்று சொன்னார். இவ்வுபாயத்தை உனக்குச் சொல்லியனுப்பிய வைகுந்தநாதனுக்குச் சாபம்கொடுத்து, முனிவர் உயிர் துறந்தார். இந்திரன் முனிவரது மரணத்துக்கு வருந்தினனாயினும், தான் கொண்ட கருத்தை முடிப்பான் வேண்டி, முனிவரது முதுகெலும்பைக் கொண்டு விருத்திராசுரனோடு யுத்தம்செய்து அவனைக்கொன்றான்.

முனிவரிட்ட சாபத்தால் ஸ்ரீமஹாவிஷ்ணு பெரிதும் கவலைப்பட்டு வருந்தினார். இந்திரனைக் காப்பாற்ற லக்ஷ்மிநேசன் செய்த உபாயம், தனக்குக் கஷ்டத்தை வருவித்தது. உடனே கைலாசபதியாகிய சிவபெருமானிடம் சென்றுமுறையிட்டார். பரமசிவம் அன்புகூர்ந்து, கமலக்கண்ணா! சாபத்துக்கு வருந்தவேண்டாம். அதற்கு நிவிர்த்தி மார்க்கம் உருத்திரகோடி க்ஷேத்திரம் ஒன்றுதான். அங்கு சென்று, சங்க மஹா தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, விதிப்படி வேதமலையைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய். அங்கேயே சிலகாலம் வசித்திரு. உனக்கு நேரிட்ட சாபத்தாலுண்டாகும் கஷ்டங்கள் நீங்கும்" என்று ஆக்யாபித்தார். அவ்வாறே, வைகுந்தன் பக்ஷிதீர்த்தமென வழங்கும் உருத்திரகோடி க்ஷேத்திரம் வந்து, சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நித்திய கருமம் முடித்து கிரியை வலம் வந்து, சிவபெருமானைத் தோத்திரித்து, சிலகாலம் வசித்திருந்

தார் எம்பெருமான் கண்ணன் முன் பிரத்தியக்ஷமாகி, சாபத்தால் நேர்ந்த துன்பத்தை நீக்கி. வைகுந்தம் அனுப்பினர். சவுனகாதி முனிவர்களே! சங்க தீர்த்த ஸ்நானமும், வேதமலைப் பிரதக்ஷிணமும் ண்ணனது சாபத்தைத் நிவிர்த்திசெய்தது என்று சூதர் சொன்னர்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு இங்கு தவம்செய்ததால், இந்த க்ஷேத்திரத்துக்கு "வேத நாராயணபுரம்" என்று பெயர் உண்டு. இங்கு விஷ்ணு ஆலயம் ஒன்றிருந்ததாகவும், அது ஒரு காலத்தில் சுவாமி மஹாபலிபுரம் பரிவேட்டைக்குப் போயிருந்தபோது, ஒரே இரவில் இடித்துக் குளமாக்கப்பட்டதாகவும் பிரஸ்தாபம். இந்த இடம் தற்காலம் தோடிக்குளம் என்கிறார்கள் பலர்.

## மார்க்கண்டேய மஹா முநிவருக்காக சங்கதீர்த்தத்தில்

# சங்கம் பிறக்கிறது.

மார்க்கண்டேய மஹா முனிவர் சிவானுக்கிரஹத்தால் கால பாசத்தை வென்று, என்றும் பதினறு வயதுடைய சிரஞ்சீவியாக வரம் பெற்று, காசிமுதலிய திவ்ய க்ஷேத்திரங்கள் சென்று, திரும்பி வருங்காலத்தில் உருத்திரகோடி க்ஷேத்திரம் வந்தார். சங்க தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தார். நித்திய கருமானுஷ்டானங்கள் முடித்தார். தீர்த்தக்கரையில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்தார். அதற்கு அபிஷேகாதிகளுக்குப் பாத்திரம் ஒன்றில்லையே யென்று சங்கற்பித்தார். உடனே அந்த சங்கதீர்த்தத்தில் சந்திர பிம்பம் போன்ற வெண்மையும் பிரகாசமுமுள்ள சங்கம் ஒன்று, ஓங்கார சப்தத்தோடு கரையோரமாகத் தோன்றிற்று. இது சிவ பெருமானது திருவருட்பேறு என எண்ணிச் சந்தோஷித்து, அதை எடுத்துச் சுத்தித்து, தான் பிரதிஷ்டை செய்த சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகம் செய்தார். பின்னர் விதிப்படி சோடசோப சாரத்தோடு பூஜைசெய்து வணங்கித் துதித்தார். அன்று முதல் அந்த சிவலிங்கப்பெருமானுக்கு மார்க்கண்டேஸ்வரர் என்றும் அத் தீர்த்தக்கரைக்கு மார்க்கண்டேய கட்டம் என்றும் வழங்கி வருகிறது.

☞ இவ்வாலயம் சங்கதீர்த்தம் மேலண்டைகரையிலிருக்கிறது. தீர்த்தேஸ்வரர் கோயிலென்று பெயர் வழங்கிவரக் காணலாம்.

## சம்பு லிங்கம் சாபம் தீர்த்த வரலாறு.

சம்புலிங்கம் என்னும் பிராமணச்சிறுவன் பிரமசாரி ஆஸ்ரமத்திலுள்ளவன் ஓர் குருவினிடம் சென்று, அவரை யடுத்து, அவருக்குச் சிசுருஷைசெய்து கொண்டு, வேதமோதிக் கல்வி கற்று வந்தான். அந்த பிராம்மண குருவானவர் தன் குலத்துக்கேற்ப, காலாகாலத்தில் அநுஷ்டிக்க வேண்டிய சந்தியாவந்தனம்-ஜெபதபாதிகள் அக்னிஹோத்திராதி நித்திய கருமங்கள் செய்கிறதில்லை. பகற்காலங்களில் கூடாவொழுக்கமாகிய நித்திரை செய்வார். வீண்பேச்சுபேசுவார். தனது குலாசாரத்துக்குரியனவல்லாத பல காரியங்கள்செய்து போது போக்குவார். இவ்வாறு குருஸ்வாமிகள் நடந்துவந்த துர்ச்செயல்களனைத்தையும் கண்டு, சம்புலிங்கம் என்னும் சிஷியன் மனவருத்தமடைவான். சிலநாள் பொறுத்தும் பார்த்தான். அவன் மனம் கிஞ்சித்தும் பொறுக்கக் கூடாமல், ஓர்நாள் குருவை நமஸ்கரித்து, "சுவாமி! தாங்கள் சாஸ்திர விதி நிஷேத காரியங்களைச் செய்து வருவது அடியேனுக்கு மனம் சகிக்கக்கூடவில்லை. பிராமணர்களுக்குப்பஞ்ச பஞ்சஉஷத் காலத்தெழுந்து,ஸ்நானம் செய்து நித்திய கருமங்களை அநுஷ்டிக்கும்படி அடிமைக்குப் போதித்து வருகின்றீர்கள். தாங்கள் அவ்வாறு செய்யவில்லை பகற்போதெல்லாம் நித்திரையில் மயங்கிக்கிடக்கின்றீர்கள். செய்ய வேண்டிய கருமங்களைக் காலாகாலத்தில் செய்கிறதில்லை, உணவை விரும்பாது, உறக்கமே உங்களது பொழுதை போக்குகிறது. தருமநீதிகளை மறந்தீர்கள். இவையாவும் அடியேன் மனதை வருத்துகின்றது. ஆதலால்அடியேன்உம்மை விட்டு நீங்குதலே உத்தமமென எண்ணுகிறேன்" என்றான். குருவானவர் சம்பு லிங்கத்தை நோக்கி, "அடா! சிறுவ! குருவை அடுத்தவன் அவர் சொன்னபடி செய்யவேண்டுமே தவிர, அவர் செய்கையைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. குருவினது செய்கையைக் கண்டித்து அவருக்குப் போதிக்க வந்த நீசித்தப்பிரமை கொண்டு அலையைக் கடவாய்" என்று சபித்தார்.

அந்தச் சாபமானது சம்பு லிங்கத்தை வருத்த ஆரம்பித்தது. என்ன செய்வான்பாபம்! சம்புலிங்கம்! தன் அறிவு இழந்து, மனம் ஒருவழி நில்லாது, மானமின்றி, அங்கு மிங்குமாக அலைந்தான். மயக்கங்கொண்டான். காடு மலை வனம் வனாந்தரங்களெல்லாம் சுற்றினான். நித்திய கருமமாகிய நீராடலை மறந்தான். ஜெப தபாதிகளை இழந்தான். உணவை வெறுத்தான்; உறக்கத்தை நீத்தான். ஊர் ஊராய்த் திரிந்து வரும் போது, தெய்வாதீனமாய் உருத்திரகோடி க்ஷேத்திரம் வந்தான். தாக விடாய் தீர்க்க, சங்க தீர்த்தக் கரையை அடைந்தான். அந்த தீர்த்தத்தைக் கண்ணால் கண்டதும், அந்த தீர்த்தத்தினின்றும் எழும்பிய குளிர்ந்த காற்று சம்புலிங்கத்தின் சரீரத்தின்மீது வீசிற்று. தன்னை அறியாமலே ஓர் வகை சந்தோஷம் அவனுக்கு உதித்தது; ஆச்சரியமுற்றான். ஏதோ இந்த தீர்த்தத்துக்கு விசேஷ மஹிமை உள்ளது. நல்லது'பரிசோதிப்போமென்று, அந்த ததீர்த்தத்தில் அமிழ்ந்து மூழ்கி எழுந்தான்; தனது பழைய நிலை தோன்றிற்று. குருசாபமானது நீங்கவும், சித்தப் பிரமை தெளிந்தது. மனம் தெளிவுற்றது. நாம் யார்? இவ்விடம் ஏன் வந்தோம்? இது என்ன க்ஷேத்திரம்? இந்த தீர்த்தத்தின் பெயர் என்ன?என்று விசாரிக்கத் தொடங்கினான். இந்த தீர்த்தத்தின் மஹிமையினால், தான் அடைந்த சாப நிவிருத்தியாலுண்டான சுகத்தை நினைந்து நினைந்து சந்தோஷித்து, இந்த தீர்த்தம் சர்வ பாப தோஷங்களைப் போக்கடிக்கும் என்று சிலகாலம் இந்தத் தீர்த்தக்கரையிலேயே வசித்தான். அன்று முதல் தினசரி காலையில் எழுந்து, நித்தியக்கடன்முடிப்பான். இந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வான், வேதமலையைப் பிரதக்ஷிணம் செய்வான்; பெண்ணினல்லாள் அம்மையாரையும், ஸ்ரீ வேதகிரிப் பெருமானையும் தொழுது வணங்குவான். கேட்டீர்களா! முநிவர்களே! சம்புலிங்கம் இந்த தீர்த்தத்தால் சித்தப்பிரமை நீங்கிய விதானத்தை யென்று சொல்லி சூதமுநிவர் மேலே நடந்த சம்பவத்தை முநிவர்களுக்குச் சொல்லுகிறார்.

## யக்ஷனது சாப விமோசனம்.

முனிவர்களே! கவனமாய்க்கேளுங்கள்! சம்புலிங்கம் ஓர் நாள் சங்க தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து அநுஷ்டானம்முடித்து, ஜெபம்செய்து கொண்டிருக்கும்போது, ஆகாய மார்க்கமாக ஓர் பக்ஷியானது மச்சம் ஒன்றை கவ்விக்கொண்டு பறந்து, சங்கதீர்ததத்துக்கு நடுவே வரும்போது, தான் கவ்வி வந்த மச்சமானது அதன் வாயினின்றும் நழுவி, அத்தீர்த்தத்தினடுவில் விழுந்தது. அம்மச்சமானது அதிரூப லாவண்யம பெருந்திய யக்ஷனுகத் தோன்றிற்று. அந்த யக்ஷனை அழைத்துப்போக, கந்தர்வக் கூட்டங்களால் சுமக்கப் பெற்ற புஷ்ப விமானமொன்று ஆகாய மார்க்கமாக வந்தது.

இந்த அதிசயக்காக்ஷியைக் கண்ணுல் கண்ட சம்புலிங்கம் என்னும் பிராமணச் சிறுவன் அதியாச்சரியப்பட்டு, தான் செய்து கொண்டிருந்த ஜெப தபாதிகளை மறந்து, பிரமித்து நின்றுன். மச்சம் யக்ஷனுக மாறியகாரணத்தை அறிய ஆவலுற்றுன். யக்ஷன் புஷ்ப விமானத்தி லேறப்போயினுன். புஷ்ப விமானத்தி லேறப்புகுந்த யக்ஷனைத் தடுத்து, "அப்பா! சுந்தரபுருஷனே! உன் வரலாறு முழுதும் அறிய விருப்பமுற்றிருக்கிறேன். நீ யார்? மச்சமாகப் போன காரணம் யாது? மறுபடி இந்த உருவோடு மாறியதன் வகை என்ன? தயை செய்து விபரமாக அறிவித்துப்பின் உன் இஷ்டப்படி புஷ்ப விமானம் ஏறலாம்" என்றுன்.

யக்ஷன் மனமகிழ்ச்சியோடு, "ஐயா! நான் ஒரு யக்ஷன். சிவ பெருமான் வீற்றிருக்கும் கைலாசத்தில் வசிப்பவன். சிவ சந்நிதானத்தில் ஊழியம் செய்வது என் தொழில். ஓர் நாள் கைலாசத்தினருகேயுள்ள ஓர் தாமரைத்தடாகத்தில் காமாந்தகாரத்தில் மூழ்கி, என்மனைவியோடு ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்தேன். அச்சமயத்தில் நந்தியெம்பெருமான் அவ்வழியே வந்தார். சிற்றின்ப விளையாட்டிலேயே மயங்கி, அவரைக் கவனியாமலிருந்து விட்டேன். நந்திதேவர் என்மீது கோபமடைந்து, 'அடா! யக்ஷா! பகற்காலமென்பதை அறியாமலும், பெரியோர் சிறியோர் என்கிற மதிப்பில்லாமலும், விஷய இச்சையிலேயே உன் மனம் ரமித்திருந்தமையால், நீமச்ச உருவெடுத்து ஜலத்திலேயே வசித்திருக்கக்கடவாய்' என்று

சாபம் கொடுத்தார். அவரது சாபத்துக்கஞ்சி, நந்திதேவரைப்பின் பற்றி நமஸ்கரித்து வணங்கி, "சுவாமி! அடியேன் அறியாமையினூற் செய்த குற்றத்தை பெரியோராகிய தாங்கள் க்ஷமித்து, அனுக்கிரஹிக்க வேண்டுமென்று பன்முறைவணங்கி நின்றேன். நந்தியப்பர் அடியேன் மீது இரங்கி, "யக்ஷா" சாபம் வீண் போகாது பலிக்கும்: ஆயினும் நூறுயிரம் வருஷம் மச்ச உருவாக இருத்தல் வேண்டும். பின்னர் சேனைப்பக்ஷியொன்று இரைக்காக உன்னைத்தூக்கிச் செல்லும். வழியில், சிவபெருமான் பக்தகோடிகளை இரக்ஷிக்கும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் உருத்திரகோடி மஹாக்ஷேத்திரத்தில், வேதமலைக்கு வடபாகத்திலுள்ள சங்க தீர்த்தத்தில் தெய்வ சம்மதமாய் நீ நழுவி விழுவாய் அந்த தீர்த்தம் உன் சரீரத்தில் பட்டமாத்திரத்தில், நீ பழைய உருக்கொள்வாய், அப்போது புஷ்ப விமானம் உன்னை அழைத்துப் போககந்தர்வர்களோடு வரும் என அனுக்கிரஹித்தார். இதுதான் நான் அறிந்தவரலாறு." என்று கந்திரபுருஷனுகிய யக்ஷன் சொல்லி, சம்புலிங்கத்தை நமஸ்கரித்து, புஷ்பவிமானமேறிக் கைலாசம் சென்றுன். இந்த வரலாற்றைக் கேட்ட சம்பு லிங்கம் மேலும் புளகாங்கிதம் கொண்டு, இந்த உருத்திரகோடி க்ஷேத்திரத்தில் சங்க தீர்த்தக்கரையிலேயே வெகுகாலம் தவம்செய்திருந்தான்.

சவுனகாதி முநி ஸிரேட்டர்களே! நீங்கள் விரும்பியபடி சங்க தீர்த்த மஹிமையைப் பற்றி விபரமாகச் சொன்னேன். இந்த தீர்த்த மஹத்வம் எவ்வளவோ? உத்கிருஷ்டமானது. சகல பாப தோஷங்களையும் சர்வரோகங்களையும் நீக்கவல்லது. இந்ததீர்த்தத்தைக் கையினல் ஸ்பரிசித்தாலும், சரீரமுழுதும் தெளிக்துக்கெண்டாலும், ஸ்நாநம் செய்தாலும், அதில் பரவி வரும் காற்று மேலே தாக்கினுலும், பஞ்சமஹா பாதகங்கள் சூரியன் முன் பனிபோல் நீங்கிவிடும். இந்திராதி தேவர்களும், பிரம விஷ்ணுக்களும், அகஸ்தியாதி சித்தர்களும், இத்தீர்த்த மஹிமையினை அறிந்து, சதாகாலம் இங்கு வசிக்கிறூர்களென்றுல், நாம் எம்மாத்திரம்? விரதம் அனுஷ்டிக்கிறவர்கள் இத்தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்தால் ஒன்றுக்கு அநந்தம் கோடி பலன்

உண்டாகும். இந்த உருத்திரகோடி க்ஷேத்திரத்தில் மூர்த்தியென்றும் தீர்த்த மென்றும் வித்தியாசமே கிடையாது. இரண்டும்சமம், இதில் அநேக நாள் ஸ்நானம் செய்தால் அஸ்வமேத யாக பலன் சித்திக்கும் என்பார்கள்.

முனிவர்களே! இத்தீர்த்தத்தில் நான்கு கட்டங்கள் (Ghats) விசேஷ மென்று சொல்லப்பட்டிருக்கிறது. இத் தீர்த்தத்துக்கு கீழகரை **ஆஞ்சநேய கட்டம்** என்றும், மேல்கரை **மார்க்கண்டேய கட்டம்** என்றும், வடகரை **ஸ்ரீ வேதமலை கட்டம்** என்றும், தென்கரை **உருத்திரகோடிகட்டம்** என்றும் பெரியோர்கள் புகழ்ந்துரைக்கின்றார்கள். ஆதலால், எல்லோரும் ஆநந்தமாய் அங்கு வசிப்பது இம்மைக்கும் மறுமைக்கும் சுகிர்தமுண்டாகு மென்பதை மீண்டும் உங்களுக்கு வற்புறுத்திச் சொல்லுகிறேன் என்று சூதர் சொல்ல சவுனகாதி முனிவர்கள் சந்தோஷித்து சூதருக்குப் பல வகை உபசாரங்கள் சொல்லி வணங்கி நின்றார்கள். ஓம் சுபம்! சுபம்!!

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக."

திருக்கழுக்குன்ற மெனவழங்கும்

உருத்திரகோடி க்ஷேத்திரத்தில்

சங்க தீர்த்த மான்மியம் முற்றுப்பெற்றது.

ஓம் தத் ஸத்.

## உயர்தரமான தமிழ் நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| வால்மீகி ஆனந்தராமாயணம் வசனம் 9-காண்டம் 14-படம் | 6 | 0 |
| ஜோதிட ஆசிரியன் வசனம் 60 தினத்தில் தானே ஜோதிடம் கற்கலாம். 4-பாகம் | 3 | 8 |
| சிவராஜயோகி பாக்கெட் டாக்டர் 215-குடும்ப அநுபவ சிகிச்சா முறை | 0 | 6 |
| மோக்ஷசாதன ரகஸ்யம் வசனம் | 4 | 0 |
| சச்சிதானந்த சிவம் வசனம் | 1 | 0 |
| பெண்ணரசியின் பிரம ஞானோபதேச வசனம் | 0 | 8 |
| ஸ்ரீ ராம பாதுகா பட்டாபிஷேகம் | 0 | 8 |
| ஸ்ரீ பக்த கபீர்தாஸ் சரித்திரம் | 0 | 8 |
| ஸதி அனஸூயா சரித்திரம் | 0 | 6 |
| ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்ரம் தாத்பர்யம் | 0 | 2 |

## முருகன் பாராயண நூல்கள்.

| | | |
|---|---|---|
| கந்தர் அநுபூதி விரிவுரையுடன் | 0 | 8 |
| கந்தர் அலங்காரம் ,, | 0 | 8 |
| கந்தர் சஷ்டி ,, | 0 | 8 |
| கந்தர் கலிவெண்பா ,, | 0 | 8 |
| திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரையுடன் | 0 | 8 |
| சுப்பிரமணியர் பரம்பரபதிகம் முருகர் அந்தாதி | 0 | 2 |
| நவக்கிரக ஸ்தோத்ரம் படங்கள் சக்கரங்கள் அர்ச்சனை த்யானம் | 0 | 8 |
| அகஸ்தியர் ரணவைத்தியம் 136-முறைகள் | 0 | 8 |
| அகஸ்தியர் நயனவிதி உரையும், நாகமுநிவர் 200 | 1 | 4 |
| நீதிவாக்கிய மஞ்சரி வசனம் | 0 | 4 |

விபரமான பெரியகேட்டலாக்கும் "கிழவன் குமரனான்" என்கிற கதையும் இனாமாக அனுப்புவோம்.

---

**S. R. நமசிவாய செட்டி அண்டு சன்,**
நயினியப்ப நாயக்கன் தெரு, பார்க்டவுன், மதராஸ்.

# கலிகால மஹிமை.

30-நாளில் தானே வைத்தியராகலாம்.

# ஆயுர்வேத ஆசான்

40-வருட அனுபவமுள்ள

பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகி அவர்கள் எழுதிய

இப்புத்தகத்தில் ஒரு பிரதியை வாங்கியவர்கள் வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. இதனால் தாங்களே சரீரத்தின் நிலையை அறிந்து வைத்தியம் செய்து கொள்ளலாம். பிறருக்கும் வைத்தியம் செய்யலாம். அதனாலும் பொருள் சம்பாதித்து ஜீவிக்கலாம். ஆயுர்வேத சித்த வயித்திய இரகஸ்யங்களை ஆண் பெண் இருபாலரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். ஆயுர்வேத முற்கால நிலைமையும் தற்கால நிலைமையும் தெரிவாக எடுத்துரைக்கப் பட்டிருப்பதுடன், ஆயுர் வேத மஹிமைகளைத்தற்கால பண்டிதர்கள் எடுத்துரைத்த விஷயங்களையும் சுருக்கமாக எடுத்து எழுதப்பட்டுள்ளது.

400-பக்கம் (உயர்ந்த பயிண்டுடன்) விலை ரூபா 2 0 0

சிவராஜயோகி பாக்கெட் டாக்டர் ஷை யார் எழுதியது

245-அநுபவ குடும்ப சிகிச்சா முறைகள் அடங்கியது

விலை அணா 6.

(தபாற்கூலி வேறு)

வால்மீகி ஆனந்த ராமாயணம் (வசனம்)

14-படம் 8-காண்டம் விலை ரூபா 6 0 0

மோக்ஷசாதன இரகஸ்யம்

கர்மம், பக்தி ராசஜ, ஹட, ஞானயோகங்களின் விளக்கம்

முன் விலை ரூபா 4 0 0

இப்போது குறைந்த விலை ரூபா 2 0 0

## லக்ஷதீபத்துக்காக பஸ் சவுகரியம்

ஸ்ரீமுகவ௵ ஆடிமீ 13உ (28-7-33) சுக்கிரவாரம்
திருக்கழுக்குன்றத்தில் நடக்கும் சங்கதீர்த்த புஷ்கர
ஸ்தானத்துக்கும் அன்றிரவு லக்ஷதீபத்துக்கும்
யாத்திரை வாசிகளுக்கு பஸ் சவுகரியம்

செங்கல்பட்டு ரயில் ஸ்டேஷனிலிருந்து திருக்கழுக்குன்றத்துக்கும், திருக்கழுக்குன்றத்திலிருந்து செங்கல்பட்டுக்கும் ஜனங்களது சவுகரியத்தை உத்தேசித்து காலாகாலத்தில் பஸ்கள் விடும்படி ஏற்பாடு செய்திருக்கின்றோம். அச்காலத்தில் பஸ் சாஜ்கொஞ்சம் அதிகமாகும்.

☞ பஸ் சொந்தக்காரர் யூனியன் காரியதரிசி,
திருக்கழுக்குன்றம்.

# லக்ஷ்மி விலாஸ்

## சாப்பாடு ஓட்டல்

## காபி கிளப்

திருக்கழுக்குன்றம் போலீஸ்ஷ்டேஷனுக்கு எதிரே யுள்ளது. யாத்திரை வாசிகளது நன்மைக்குகந்தபடி காபீ-டீ-கொக்கோ-ஓவல்டின் பலகாரதினுசுகள் சாப்பாடு முதலிய, மிக்க நேர்த்தியாகவும் சுத்தமாகவும் செய்யப்பட்டிருக்கிறது ஒவ்வொரு விஷயமும் சொந்தக்காரர் மேற்பார்வையில் நடத்தி வருகிறதை அன்பர்கள் கவனிக்கவும்.

☞ வயித்திநாதையர்.
சொந்தக்காரர், திருக்கழுக்குன்றம்.

நமசிவாய ராஜயோகி திருக்கழுக்குன்றம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கர்மரோகஹரி என்னும் மன்மத சிந்தாமணி லேகியம், தாதுபுஷ்டி - இரத்த-விருத்தி - சகலரோக நிவாரணம் செய்யக்கூடியது, 10-பலம்டப்பி 1-க்கு | 2 | 8 | 0 |
| 2. | ஷை நவசக்தி உப்பு சேர்ந்தது | 3 | 8 | 0 |
| 3. | ஷை அயக்காந்த செந்தூரம் சேர்ந்தது | 4 | 0 | 0 |
| 4. | நவ சக்தி உப்பு (தனி) 1-பலம் புட்டி | 1 | 0 | 0 |
| 5. | சிவராஜயோகி குளிகை (மேக சம்மந்தமான சகல ரோகங்களை நீக்கும். புட்டி 1-க்கு | 1 | 0 | 0 |
| 6. | பித்தரோக சஞ்சீவி சூரணம் டப்பி 1-க்கு | 1 | 0 | 0 |
| 9. | காபி பொடிக்குப் பதில் ஹாப்பி பவுடர் | 1 | 0 | 0 |
| 8; | இலவணதுஞ்சதி கிருதம்: சகல் வித மேக சம்பந்தமான வாய்வு-சூதககட்டு-நீர் ரோசம். முதலிய நீக்க வல்லது. 6-அவுன்ஸ் புட்டி | 3 | 8 | 0 |
| 9; | ம்ருத்யு சஞ்சீவி கிருதம். (18-வகை குஷ்டங்களை நீக்கவல்லது) 6-அவுன்ஸ் புட்டி | 3 | 0 | 0 |
| 10. | மேக ரண வெண்ணெய் சகல மேக ரோகங்களுக்கும் மேல் பூசு மருந்து | 0 | 8 | 0 |

இந்நூலாசிரியர் எழுதிய உயர்தரமான நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருக்கழுக்குன்ற ஸ்தல புராணம் வசனம் (400-பக்கங்கள் கொண்டது) | 2 | 0 | 0 |
| 2. | ஷை 40 பக்கம் ஷை | 0 | 0 | 9 |
| 3. | ஷை 12 பக்கம் ஷை | 0 | 0 | 6 |
| 4. | ஷை திருவடிக்கோயில் மான்மியம் | 0 | 0 | 6 |
| 5. | ஷை சங்கதீர்த்த மேளா | 0 | 1 | 0 |
| 7. | ஷை பக்ஷிதரிசண தேவ ரகஸ்ய படம் | 0 | 1 | 0 |
| 9. | ஷை ஷை கார்டு படம் | 0 | 0 | 6 |
| 10. | ஆயுர்வேத ஆசான் வசனம் | 2 | 0 | 0 |
| 11. | சிவராஜயோகி பாக்கெட் டாக்டர் | 0 | 6 | 0 |

கண்ணாடி சட்டம் போட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | ஷை 6-4 விசித்திர வர்ணம் வைத்தது | 0 | 3 | 0 |
| 13, | ஷை 4-3 ஷை | 0 | 1 | 6 |
| 14. | ஷை 3-2 அம்மன் படம் (தனி) | 0 | 0 | 9 |


ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ், சென்னை, 18-7-33